| IA 1/2023 EP. 26/2022 | ம. சா .1 | தேதி.11.04.2023 | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சாலமன் ராஜா | வயது | 52 |
| த/பெ. | திரு. முத்துசாமி | முகவரி | 3/318, திருமூர்த்தி செட்டியார் தெரு, முத்துசாமி வெல்லிங்கடன் பாராக்ஸ் |
| வட்டம் | குன்னூர் | மாவட்டம் | நீலகிரி |

ம.சா.1 முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. நான் 8 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனது முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமென்றால் சரிதான். சந்திரசேகர் தாக்கல் செய்த அசல் வழக்கு 122/2017 ல் நானும் ஒரு பிரதிவாதியென்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே பதிலுரையை மற்ற பிரதிவாதிகளும் ஏற்றுக் கொண்டார்களென்றால் சரிதான். அதில் என் அக்கா மெர்சி ஸ்டெல்லா சாட்சி சொல்லியுள்ளாரென்றால் சரிதான். அவர் சாட்சி சொன்ன விபரம் எனக்கு தெரியுமென்றால் சரிதான். என் அக்கா சாட்சி சொன்ன விபரங்கள் எல்லாம் சரிதான். அந்த வழக்கில் நான் எங்கள் தரப்பில் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகளும் என் அக்கா சாட்சி சொன்ன சங்கதியும் இந்த மனுவில் நாங்கள் சொல்லியுள்ள சங்கதிகளும் ஒன்றே தான் என்றால் சரிதான்.

2. அந்த வழக்கில் எங்களுக்கெதிராக தீர்ப்பு பகரப்பட்டதென்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கெதிராக நாங்கள் அனைவரும் மேல்முறையீட்டு வழக்கு 10/2019 ஐ கோவை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டிலும் அதே சங்கதிகளை தான் சொல்லி தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் முழுவிசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டதென்றால் சரிதான். 25.5.2010 ல் என் தந்தை முத்துசாமி சந்திரசேகருக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டாரென்றால் சரிதான் எங்களுக்கு தெரியாமல் எழுதி வைத்துவிட்டார். மேற்சொன்ன வழக்கில் என் அண்ணன் சந்திரசேகருக்கு ஆதரவாக என் அப்பா முத்துசாமியே 2 வது சாட்சியாக சாட்சி சொல்லியுள்ளாரென்றால் சரிதான். அவர் மனநிலை சரியில்லாமல் அப்படி சொல்லிவிட்டார். அவர் மனநிலை சரியில்லாமல் சாட்சி

சொன்னதாக நான் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றும், முழுவிபரங்களை தெரிந்து தான் அவர் சாட்சி சொன்னார் என்றால் சரியல்ல.

3. மேற்சொன்ன வழக்கில் இருதரப்பினரையும் முழுமையாக விசாரித்து இரு தரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்து தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்றால் எங்களை சரியாக விசாரிக்கவே இல்லை. அந்த தீர்ப்பில் என் தந்தை முத்துசாமியின் சுயசம்பாத்திய சொத்துக்களென தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்றால் அது தவறாகும். என் தந்தை சொத்தை விலைக்கு பெறுவதற்கு நாங்கள் எந்த பணமும் தரவில்லையென அத்தீர்ப்பில் தீர்வு காணப்பட்டுள்ளதென்றால் அது பொய்யாகும். ம.சா.ஆ.4 ல் சொல்லப்பட்டுள்ள சுந்தரி என் தயார் என்றால் சரிதான். அதில் அவரது பிறந்த தேதி 05.03.1945 என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 3 வது பத்தியில் என் தாயாருக்கு 1952 ல் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கு 10/2019 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கெதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் எவ்வித தடை உத்திரவும் இல்லையென்றால் சரிதான்.

4. அந்த அசல் வழக்கு. 122/2017 ல் இரண்டு மாதங்களுக்குள் வழக்கு சொத்தை காலி செய்து கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு கொடுக்காத பட்சத்தில் மாதம் ரூ.2000/- கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்றால் சரிதான். சந்திரசேகர் சுவாதீனம் எடுத்துக் கொள்ளக்கூடாதென்று சொல்லி அவரை அழைக்களிக்க வேண்டுமென்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மனு சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. மனுச் சொத்தில் எனக்கோ எனது சகோதரிக்கோ எந்த வித உரிமையுமில்லையென்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கதென்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/- பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.